**<u>அசல் வழக்கு எண்.20/2019</u>**

**<u>தேதி: 11.4.2023.</u>**

**<u>வா.சா.1 :</u> ( திருமதி. பிரியா த/பெ. நித்தியானந்தம் )**

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

**சென்னாவரம் மனை பிரிவு போட்டதில் கிரயம் பெற்ற நபர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரி தான். முனியம்மாள் வகையறாவிடமும், பசுபதியிடமும் கிரயம் பெற்ற சொத்தினை இவ்வழக்கில் தாவா சொத்தாக காட்டப்படவில்லை என்றால் சரி தான். சென்னாவரத்தில் போடப்பட்ட மனை பிரிவுகள் எவ்வளவு விலைக்கு விற்கப்பட்டது என்று தெரியாத நிலையில் அந்த கிரய தொகையை வைத்து தான் என் தாயார் பெயரில் வந்தவாசி நகரில் 60 1/2 சென்ட் நிலம் வாங்கியதாக சொல்வது ஏற்கக்கூடியதல்ல என்றால் மனை விற்கப்பட்ட பிறகு தான் 60 1/2 சென்ட் நிலம் வாங்கப்பட்டது.**

**என் தாயார் பெயரில் வாங்கப்பட்ட 60 1/2 சென்ட் நிலமும், பசுபதியிடம் என் தந்தை சென்னாவரத்தில் வாங்கிய நிலமும் ஒரே நாளில் என்றால் சரி தான். 60 1/2 சென்ட் நிலம் என் தாயார் பெயரில் யாரிடமிருந்து எவ்வளவு தொகைக்கு வாங்கினார்கள் என்ற விவரத்தையும், 60 1/2 சென்ட் நிலத்தையும் என் பிராதில் பாகப்பிரிவினை கேட்கவில்லை என்றால் சரி தான். 60 1/2 சென்ட் நிலம் என் தாயாரின் தனிப்பட்ட சொத்து என்பதால் நானோ என் சகோதரரோ அந்த சொத்தில் பாகம் கேட்க முடியாது என்றால் என் தாயாரின் தனிப்பட்ட சொத்து அல்ல.**

**மாமி தேவகியும் 60 1/2 சென்ட் நிலம் வந்தவாசியில் அதேபோல் வாங்கியுள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. என் மாமியும், என்**

அம்மாவும் அவர்களுடைய நிலங்களை ஒன்றாக மனை பிரிவுகள் செய்து விற்பனை செய்தார்கள் என்றால் சரி தான். மேற்படி மனை பிரிவுகள் எத்தனை போடப்பட்டது, யார் யாருக்கு எப்போது எவ்வளவு தொகைக்கு விற்பனை செய்யப்பட்டது என்பது குறித்து என்னுடைய பிராதில் சொல்லவில்லை என்றால் சரி தான்.

தாவாவில் காட்டியுள்ள 1வது, 3வது மற்றும் 4வது அயிட்ட சொத்து யாரிடம் எவ்வளவு தொகைக்கு பெறப்பட்டது என்று என்னுடைய பிராதில் சொல்லவில்லை என்றால் சரி தான். தாவா 1வது அயிட்ட சொத்தில் தான் 1 முதல் 3 பிரதிவாதிகள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரி தான். நடுக்குப்பம் கிராம தாவா அயிட்டம் எண்.50 முதல் 92 வரையுள்ள சொத்துக்கள் எவ்வளவு தொகைக்கு எப்படி வாங்கினார்கள் என்பது குறித்து என் தாவாவில் சொல்லவில்லை என்றால் சரி தான்.தாவா அயிட்டம் எண்.50 முதல் 92 வரையுள்ள சொத்துக்கள் நிலமாக வாங்கி மனை பிரிவுகளாக போடப்பட்டது என்றால் சரி தான்.

மொத்தம் எத்தனை மனை பிரிவுகள் போடப்பட்டு எவ்வளவு தொகைக்கு எத்தனை மனை பிரிவுகள் விற்கப்பட்டது என்பது குறித்து என்னுடைய தாவாவில் சொல்லவில்லை என்றால் சரி தான். நடுக்குப்பம் மனை பிரிவில் கிரயம் வாங்கிய கிரயதாரர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சேர்த்துள்ளேன். 4 ல் இருந்து 17 பிரதிவாதிகள் தான் அவர்கள் என்றால் சரி தான். 4முதல் 17 பிரதிவாதிகள் எந்த மனை எண்ணை எவ்வளவு தொகைக்கு கிரயம் பெற்றார்கள் என்ற விவரத்தை என்னுடைய பிராதில் சொல்லவில்லை என்றால் சரி தான்.

4 முதல் 17 பிரதிவாதிகள் கிரயம் பெற்ற மனை பிரிவுகளை இவ்வழக்கில் தாவா சொத்தாக காட்டியுள்ளேனா என்றால் காட்டியுள்ளேன். எந்த அயிட்ட சொத்து என்று குறிப்பிட்டு என்னால் சொல்ல முடியாது. தாவா அயிட்டம் 50ல் இருந்து 92 வரையிலான மனை பிரிவுகள் மற்றும் 1வது அயிட்ட சொத்து என் அம்மாவின் தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல.

என் தாயார் திருமணத்தின்போது எவ்வளவு நகை போட்டு வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் தெரியும். என் அம்மாவின் சீர் நகைகளை தாவாவில் சொல்லவில்லை என்றால் சரி தான். தாவா 2வது அயிட்ட சொத்து கடையாகும். அதில் என் கணவர் அனுபவத்தில் வாடகைக்கு எடுத்து டிஜிட்டல் பேனர் கடை வைத்திருக்கிறார் என்றால் சரி தான். ஜெராக்ஸ் கடை வைத்திருந்தார் என்றால்  நான் தான் கடையின் பக்கத்தில் ஜெராக்ஸ் கடை வைத்துள்ளேன்.

என்னுடைய ஜெராக்ஸ் கடைக்கு வாடகை தருகிறேனா என்றால் நான் என் கடைக்கு வாடகை கொடுத்தது இல்லை. என் கணவர் கடையை காலி செய்ய சொன்னதற்கு பிறகு என் கணவர் எனக்கு தெரியாமல் என் கடைக்கும் சேர்த்து வாடகை மணியார்டர் மூலம் செலுத்தி வருகிறார் என்பது கடந்த இரண்டு மாதம் முன்பு தான் தெரியும். என் கணவர் கடைக்கு மாத வாடகை ரூ.5500/- என் கடைக்கு ரூ.1000/-. என் கணவர் கடைக்கு வாடகை முன் தொகை ஒரு லட்சம் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

தாவா 2வது சொத்தில் வாடகை இருப்பது குறித்து நான் என் பிராதில் சொல்லவில்லை என்றால் சரி தான். தாவா 2வது அயிட்ட சொத்து எங்கள் அனுபவத்தில் இருப்பதை மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன்

என்றால் வாடகைக்கு இருப்பதால் அதுகுறித்து சொல்லவில்லை. என் தாயாரின் வந்தவாசி மனை பிரிவில் இருந்து ராமநாதனும், ரங்கநாயகியும் வாங்கிய மனை பிரிவுகளை ராமநாதன், ரங்கநாயகியிடம் என் தந்தை வாங்கியுள்ளார் என்றால் என் அப்பா என் தாயாரின் மனை பிரிவில் இடம் வாங்கியதும், ராமநாதன், ரங்கநாயகியிடம் வாங்கியதும் எனக்கு தெரியும். அந்த இடம் தானா இந்த இடம் என்று எனக்கு தெரியவில்லை.

என் அம்மாவின் 60 1/2 சென்ட் நிலத்தில் மற்ற மனை பிரிவுகளை சேர்க்காமல் ராமநாதன், ரங்கநாயகி கிரயம் வாங்கிய மனை பிரிவுகளை மட்டும் இவ்வழக்கில் சேர்த்திருப்பது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ராமநாதன், ரங்கநாயகியிடமிருந்து கிரயம் பெற்ற சொத்தை என் அப்பா சம்பந்தம் முதலியார் மற்றும் தொழில்நேசர் ஆகிய இருவருக்கும் கிரயம் செய்துவிட்டார் என்றால் சரி தான். மேற்படி இருவரையும் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரி தான்.

தாவா 3வது அயிட்ட சொத்து அருண் மற்றும் ஏழுமலை என்பவர்களுக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது என்றால் வாடகைதாரர் பெயர் தெரியாது. வாடகைக்கு விடப்பட்டுள்ளது. தாவா 4வது அயிட்ட சொத்து ஓட்டலுக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. தாவா அயிட்ட 16 முதல் 49 வரையான சொத்துக்கள் என் அப்பா நிலமாக வாங்கி மனை பிரிவுகளாக போடப்பட்டது என்றால் மனை பிரிவுகள் அல்ல நிலங்கள் தான்.

மேற்படி அயிட்ட சொத்துக்கள், தாவா அயிட்டம் 5 முதல் 15, மற்றும் தாவா அயிட்டம் 93 முதல் 96 வரையான சொத்துக்களை என் தந்தை எவ்வளவு ரூபாய்க்கு எப்படி கிரயம் வாங்கினார் என்று என்னுடைய பிராதில்

சொல்லவில்லை என்றால் சரி தான். மேற்படி சொத்துக்கள் யாருக்கு கிரயம் செய்யாமல் உள்ளது என்றால் சரி தான். தாவா அயிட்டம் 93 முதல் 96 வரையான சொத்துக்களை என்னுடைய அப்பா என் அம்மாவிற்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த சொத்துக்கள் என்றால் சரி தான். மேற்படி செட்டில்மெண்ட் குறித்து என்னுடைய பிராதிலும் பிரமாணப் பத்திரத்திலும் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன்.

தாவா அயிட்டம் 93 முதல் 96 வரையான சொத்தில் 59 சென்ட் நிலத்தை என் தந்தை மனை பிரிவுகளாக பிரித்ததில் மனை பிரிவுகளை கிரயம் வாங்கியவர்கள் தான் 18 முதல் 20 வரையான பிரதிவாதிகள் என்றால் சரி தான். 18 முதல் 20 பிரதிவாதிகள் கிரயம் வாங்கிய மனை பிரிவுகளை இவ்வழக்கில் தாவா அயிட்ட சொத்தாக காட்டியுள்ளேனா என்றால் காட்டியுள்ளேன். எந்த அயிட்டம் என்று கவனம் இல்லை. அதில் பிளாட் நெம்பர் 5,6,7. தாவா அயிட்டம் 93 முதல் 96 வரையான சொத்துக்கள் மனை பிரிவுகளாக பிரித்தது குறித்தும், அதில் 18 முதல் 20 பிரதிவாதிகள் பிளாட் நெம்பர் 5,6,7 கிரயம் வாங்கியதையும் என்னுடைய பிராதில் சொல்லவில்லை என்றால் சரி தான்.

தாவா பி அட்டவனை சொத்தை என் அப்பா கிரயம் செய்ததற்கான கிரய தொகையில் என்னுடைய பங்கை எனக்கு கொடுக்கவில்லை என்றால் சரி தான். அப்போது நான் மைனராக இருந்தேன். மேஜரான பிறகு நான் கிரயத்தை ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரி தான். தாவா பி அட்டவனை கிரயப்பத்திரத்தில் கிரயதாரர் சுகுமாறன் கேட்டுக்கொண்டதால் தான் என்னையும் 2ஆம் பிரதிவாதியையும் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டது

என்றால் பூர்வீக சொத்து என்பதால் தான் சேர்க்கப்பட்டது.

எனக்கு தாவா பி அட்டவனை சொத்தில் உரிமையில்லாததால் தான் இவ்வழக்கில் பாகம் கேட்டு போடவில்லை என்றால் நாங்கள் ஒரே குடும்பமாக இருந்ததால் அதை பற்றி அப்போது கேட்கவில்லை. மேற்படி சங்கதியை பிராதில் சொல்லவில்லை என்றால் சரி தான்.

1,3 பிரதிவாதிகள் என் நலனுக்கு எதிராக செயல்படுவது என்பது என்ன என்றால் என்னுடைய பங்கை தர மறுத்தது. என் அப்பா அம்மா என் அண்ணனுக்கு எந்த சொத்தும் எழுதி வைக்கவில்லை என்றால் எழுதி வைப்பதாக சொன்னார்கள். என்ன செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. 4 முதல் 12 பிரதிவாதிகள் நடுக்குப்பம் கிராமத்தில் கிரயம் வாங்கிய மனை பிரிவுகளாக இவ்வழக்கில் எத்தனை அயிட்ட சொத்துக்களாக காட்டியுள்ளேன் என்றால் எந்த அயிட்டம் என்று தெரியவில்லை. நடுக்குப்பம் மனை பிரிவுகள் தாவாவில் 50ல் இருந்து 92 வரை காட்டியுள்ளேன்.

மேற்படி நடுக்குப்பம் மனை பிரிவுகளையும் பார்க்கிற்காகவும் பொது உபயோகத்திற்காகவும் மனைகள் ஒதுக்கப்பட்டு நடுக்குப்பம் பஞ்சாயத்திற்கு எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பஞ்சாயத்திற்கு ஒதுக்கிய நிலங்களை இவ்வழக்கில் காட்டவில்லை என்றால் சரி தான். நடுக்குப்பம் பஞ்சாயத்தை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரி தான்.

நடுக்குப்பம் மனை பிரிவில் பிளாட் எண்.1 மற்றும் 26 கண்ணப்பன் மற்றும் நாராயணனுக்கு கிரயம் கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும், அவர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் அதை பற்றி

**கவனம் இல்லை. தாவா 4வது அயிட்ட சொத்து என் தகப்பனார் அவருடைய மாமியார் மற்றும் மைத்துனரிடம் கிரயம் பெற்றது என்றால் சரி தான்.**

**வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/-K.Vijaya.
Additional District Judge,
Fast Track Court, Arani.